**சியம்பலாண்டுவ பிரதேச சபை**
**மொனறாகலை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 12 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 ஜூன் 20 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர்த்து, சியம்பலாண்டுவ பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

(அ) சபை உடமை கொண்டுள்ள 06 காணித்துண்டுகள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பிரதேச சபைக்கு சொந்தமான 06 கட்டிடங்களின் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் சனவரி 01 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய ரூபா 153,000 ஆன தொடர்பாடல் கோபுரக்கட்டண வருமானம் ரூபா 228,000 எனக் கணக்கீடு செய்தமையால் கிடைக்க வேண்டிய வருமானம் மற்றும் திரண்ட நிதியம் ரூபா 75,000 ஆல் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தன.

(ஈ) முன்னைய ஆண்டிற்குரிய மீளாய்வாண்டில் கிடைத்த ரூபா 67,619 ஆன நிலையான வைப்பு வட்டி திரண்ட நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டு நிலையான வைப்பு வட்டி செலவு வைக்கப்படாமையால் ஆண்டின் மிகை அப்பெறுமதியால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டிற்காக கிடைக்க வேண்டிய ரூபா 71,576 ஆன நிலையான வைப்பு வட்டி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஊ) பிரதேச சபைகளை பலப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் முன்னைய ஆண்டின் போது கிடைத்த ரூபா 1,000,000 வைப்புக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது இப்பெறுமதி திரண்ட நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டு பொது வைப்பில் செலவு வைக்கப்படாமையால் திரண்ட நிதியம் ரூபா 2,000,000 குறைத்தும் வைப்புக் கணக்கு ரூபா 2,000,000 ஆல் அதிகரித்தும் காண்பிக்கப்பட்டிருந்தன.

(எ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய செலவினம் ரூபா 120,000 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஏ) மீளாய்வாண்டின் சனவரி 01 இல் உள்ளவாறு கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா 187,025 ஆன பெக்கோலோடர் கூலி வருமானம் சீராக்கம் செய்யும் போது வருமானக் கணக்கு வரவு வைக்கப்பட்டமையால் ஆண்டின் மிகை அப்பெறுமானத்தினால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஐ) மீளாய்வாண்டின் போது நிர்மாணிக்கப்பட்ட ரூபா 2,324,502 பெறுமதியான பிரதேச சபை கட்டிடங்கள் மற்றும் பொருத்திகள் மூலதனமாக்கப்பட்டிருக்க வில்லை.

(ஒ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய விளம்பர அறிவித்தல் பதாகை கட்டணம் ரூபா 327,400 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

**1.3.2 இணக்கம் செய்யப்படாத கணக்குகள்**

மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படும் பெக்கோ லோடர் இயந்திர கடன்பட்டோர் மீதி மற்றும் பெக்கோ லோடர் இயந்திர கடன் பட்டோர் பதிவேட்டில் காணப்படும் மீதிகளுக்கு இடையே ரூபா 130,175 ஆன வேறுபாடு காணப்பட்டது.

**1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**பெற வேண்டிய கணக்குகள்**

(i) 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் சபைக்குச் சொந்தமான பெக்கோ லோடரை வாடகைக்கு வழங்கியமையால் அறவிடப்பட வேண்டிய ரூபா 241,975 தொகையை மீளாய்வாண்டிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2008 – 2016 காலப்பகுதி வரை அறவிடப்பட வேண்டிய ரூபா 153,000 கூட்டுத்தொகையான தொடர்பாடல் கோபுரக் கட்டண வருமானத்தை மீளாய்வாண்டின் போதும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

**தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமை**

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாத காரணத்தால் ரூபா 178,302,188 ஆன 09 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தன.

**1.3.5 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்**

பின்வரும் சட்டங்கள், விதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங் களுடனான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாகம்) விதிகள் 143 மற்றும் 145 விதிகள் | | பொது வைப்பு பதிவேடு மாதாந்தம் சமப்படுத்தப்பட்டு பிரதான பேரேட்டுடன் இணக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் 3.i ஆம் பந்தி | | சபைக்குச் சொந்தமான 9 வாகனங்கள் தொடர்பாக எரிபொருள் எரிவு பற்றிய பரிசோதனை செய்யப்பட்டிருக்க வில்லை. |
| (ஈ) 2015 யூலை 10 ஆந் திகதிய 02/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 04 ஆம் பிரிவு | | பயன்பாட்டிற்கு எடுக்கப்படாத சொத்துக்கள் 2015 ஒக்தோபர் 10 ஆந் திகதிக்கு முன்னர் கைதவிர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் சபைக்குச் சொந்தமான பயன்படுத்தாத 7 வாகனங்கள் தொடர்பில் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (உ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 1986 மார்ச் 10 ஆந் திகதிய 392/9 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானிப் பத்திரம் மற்றும் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகத்தின் 1985 மார்ச் 20 ஆந் திகதிய 08/01/38 ஆம் இலக்க சுற்றறிக்கை | | சபை அதிகாரப் பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்த கட்டிடங் களுக்காக அங்கீகாரம் வழங்குவதற்கு திட்டமிடல் குழுவொன்று தாபிக்கப்பட்டி ருக்கவில்லை. |

## 2 நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 7,577,611 ஆக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 9,407,618 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரித்தாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| வருமான விடயம் | 2017 மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | 2016 மதிப்பிடப்பட்ட வருமானம | பட்டியலிட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ------------ | ------------- | ------------- | -------------- | --------------- | --------------- | ------------- | ---------------- |
| | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. |
| வீதவரி மற்றும் வரி | 422,000 | 467,888 | 467,888 | - | 2,000 | 1,142,245 | 1,142,245 | - |
| வாடகை | 15,332,710 | 10,000,435 | 10,000,435 | 5,332,275 | 17,239,450 | 11,708,357 | 11,708,357 | 5,531,093 |
| அனுமதிப்பத்திர கட்டணங்கள் | 1,563,000 | 1,454,630 | 1,454,630 | 108,370 | 1,553,000 | 1,438,520 | 1,438,520 | 114,480 |
| ஏனைய வருமானம் | 46,247,112 | 44,331,460 | 44,331,460 | 1,915,651 | 50,343,872 | 44,015,792 | 44,015,792 | 6,328,079 |
| மொத்தம் | 63,564,822 | 56,254,413 | 56,254,413 | 7356296 | 69,138,322 | 58,304,914 | 58,304,914 | 11,973,652 |

### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

மீளாய்வாண்டில் பட்டியலிடப்பட்ட வருமானம் ரூபா 56 மில்லியனான மொத்த வருமானம் சேகரிக்கப்பட்டிருந்த போதிலும் ஆண்டின் இறுதி வரையில் ரூபா 7.4 மில்லியன் நிலுவையாக இருந்தது.

### 2.2.3 வீதவரி மற்றும் வரி

சபை அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள முன்னேற்றமடைந்த பிரதேசங்களை இனங்கண்டு வீதவரி அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்து சபையின் வருமானத்தை அதிகரித்துக் கொள்வது தொடர்பாக உரிய கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 வாடகை

**கடை வாடகை**

சபைக்குச் சொந்தமான 84 கடைகளில் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடப்பட வேண்டிய ரூபா 128,069 ஆன வாடகை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.5 வியாபார அனுமதிப்பத்திரம்

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 152 ஆம் பிரிவின் பிரகாரம் பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள தொடர்பாடல் கோபுரங்களிலிருந்து வருடாந்தம் குத்தகை அறவிடுவதற்காக பிரசித்தப்படுத்தப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்காகவும் மொத்தம் ரூபா 171,000 அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 2.2.6 ஏனைய வருமானம்

(அ) பெக்கோலோடர் இயந்திரத்தை வாடகைக்கு வழங்கியதால் மீளாய்வாண்டில் கிடைக்க வேண்டிய ரூபா 274,425 ஐ அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபை அதிகாரப் பிரதேசத்தில் விளம்பர அறிவித்தல்களை காட்சிப்படுத்துவதற்காக உப விதிகள் பிறப்பிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது 114

அறிவித்தல் பலகைகளுக்காக ரூபா 327,400 கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.7 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதான செயலாளரிடமிருந்தும் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டியிருந்த நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 168,600 மற்றும் முத்திரை கட்டணம் ரூபா 2,565,919 ஆக இருந்தது.

### 2.3 மிகை அறவீடு

பிரதேச சபை சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் பொறுப்பு வாய்ந்த நபர்களுக்கு எதிராக என்னால் முன்னைய ஆண்டுகளில் விதிக்கப்பட்ட மிகை அறவீட்டிற்காக 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 582,567 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுச் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல், மக்களின் நலனோம்புகை மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பான வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

#### (அ) உப விதிகள்

பிரதேச சபை சட்டத்தின் 126 ஆவது பிரிவின் கீழ் 30 பிரதான விடயங்களை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் பிறப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை 23 விடயங்களுக்காக மாத்திரம் உப விதிகள் பிறப்பிக்கப்பட்டிருந்தன.

#### (ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம்

பிறப்பிக்கப்பட்ட உப விதிகளின் பிரகாரம் சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகள் தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

#### (இ) திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 1816/43 ஆம் இலக்க 2013 யூன் 28 ஆந் திகதிய வர்த்தமானி பத்திரத்தின் மூலம் வெளியிடப்பட்ட ஊவா மாகாண உப விதிகளை பின்பற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதிலும் அதன் 13 ஆவது பகுதியின் 2 ஆம் பிரிவின் பிரகாரம் கழிவுப்பொருள் வரி விதிக்கப்பட்டு கழிவுப் பொருள் முகாமைத்துவ செலவினம் மீள் நிரப்பப்பட்டிருக்கவில்லை.

#### (ஈ) நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளல்

நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பான 2030 நிகழ்ச்சி நிரல் பிரகாரம் சபை அறிந்துகொள்ளாததன் காரணமாக அந் நோக்கங்களுக்கான உலகலாவிய குறிகாட்டிகள் மூலம் சபை அதிகாரப் பிரதேசத்தில் பொது மக்களின் வாழ்க்கை நிலைமை மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான நீண்டகாலத் திட்டம் 2018 மே 25 ஆந் திகதி அளவிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை**

**நட்டங்கள் மற்றும் சேதங்களை அறவிடாமை**

சபைக்கு சொந்தமான பெக்கோ லோடர் இயந்திரம் விபத்திற்குள்ளாகி அதனை திருத்தம் செய்வதற்கு செலுத்தப்பட்டிருந்த ரூபா 58,000 தொகையை காப்புறுதியிலிருந்து மீளளிப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.3 மனித வள முகாமைத்துவம்**

வருடக் கணக்காக அறவிடப்படாமல் காணப்படும் தற்போது சேவையில் இல்லாத 06 ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 35,329 ஆன ஊழியர் கடனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

34 மயானங்களின் உரித்தினைக் கையேற்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.5 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

வாகன சேவை நிலையமொன்றை நிர்மாணிப்பதற்காக 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 1,164,60 செலவிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையில் அது எதிர்பார்க்கப்பட்ட செயற்பாடுகளுக்காக பயன்படுத்தாதிருந்தமையால் செலவிடப்பட்ட செலவினம் சிக்கனமற்ற செலவினமாக இருந்தது.

**3.6 பெறுகைகள்**

**3.6.1 பெறுகை திட்டம்**

மீளாய்வாண்டிற்காக பிரதேச சபையினால் வருடாந்த பெறுகை திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.6.2 வருடாந்த ஆதனங்களை கேள்வி கோரி வழங்கல்**

சபையினால் பெறுகை அறிவித்தல் வெளியிடும் போது வழங்குனர்களை மட்டுப்படுத்துவதற்கு நிபந்தனைகள் உள்ளடக்கப்பட்டு தேசிய போட்டி விலை கோரல் இடம்பெற்றிருந்தது.

**04. நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

மீளாய்வாண்டிற்காக பிரதேச சபையின் பாதிடப்பட்ட வருமானம், செலவினம் மற்றும் உள்ளபடியான வருமானம், செலவினங்களுக்கிடையே கருத்திற் கொள்ளக்கூடிய விலகல்கள் அவதானிக்கப்பட்டதால் பாதீடு ஆக்கபூர்வமாக கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு**

மீளாய்வாண்டிற்காக சபையினால் போதியளவில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்களை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 05 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது இனங்காணப்பட்ட குறைபாடுகள் சபையின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டதுடன். பின்வரும் கட்டுப்பாட்டு துறைகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகள் | குறைபாடுகள் |
| --- | --- |
| (அ) கணக்கீடு | (i) காணி மற்றும் கட்டிடங்கள் கணக்கீடு செய்யப்படாமை |
| | (ii) மீளாய்வாண்டின் கொள்வனவு செய்த நிலையான சொத்துக்கள் கணக்கீடு செய்யப்படாமை. |
| | (iii) அட்டுறு செலவினம் கணக்கீடு செய்யப்படாமை. |
| | (iv) பெற வேண்டிய வருமானம் கணக்கீடு செய்யப்படாமை. |
| | (v) கணக்கு மீதிகள் தவறாக காண்பிக்காமை |
| (ஆ) சொத்துக்கள் / ஆதனங்கள் | (i) ஆவணங்களுக்கு உட்படுத்தாமை. |
| | (ii) காணி கையேற்க நடவடிக்கை எடுக்கப்படாமை. |